Crl. Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure.)
----------

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, VALPARAI.

Calendar Case No. : CC 53/2016 24-12-2018 –திங்கள்கிழமை

Miscellaneous :

Prosecution : அ.சா.7

Deposition of Witness for

Name : மாரிமுத்து

Father's Name : சுப்பிரமணி

Age : 59

Taluk : வால்பாறை

Religion : இந்தியன்

Calling : கூலி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 2018.

முதல் விசாரணை

நான் தற்போது அக்காமலையில் வசித்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2-ஐ தெரியும். எதிரியையும் தெரியும். கடந்த 27-8-2016-ம் தேதி ஜீவிதாவின் தகப்பனார் வீடு தீ பிடித்து விட்டது. நாங்கள் பக்கத்து வீட்டில் வசித்து வருகிறோம். வீட்டில் இருந்த பொருட்கள் அனைத்தும் எரிந்து விட்டது. அவ்வாறு செய்தது ஜீவிதாவின் கணவரான எதிரி ராஜா தான். பின்பு அன்றைய தினமே போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், சரவணனும் கையொப்பம் இட்டோம். பார்வைமகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது. பார்வைமகஜர் அ.சா.ஆ.4. வேறு எந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டது என்று எனக்கு

தெரியாது.  ஆனால் கைப்பற்றுதல் மகஜரில் நான் கையொப்பம் இட்டேன்.  கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது.  கையொப்பம் அ.சா.ஆ.5. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.  குறுக்கு விசாரணை செய்வதற்கு கால அவகாசம் கோரப்பட்டது.

(ஒப்பம்/- S.P.கவிதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

Compared by S.Shakila